பதிவுத்துறையில் அதிரடி

7 மாவட்ட பதிவாளர்கள் 43 சார்பதிவாளர் மாற்றம்

சென்னை, ஜூன் 4: தமிழக வணிக வரித்துறை மற்றும் பதிவுத்துறை செயலாளர் குமரகுருபரன் வெளியிட்டுள்ள உத்தரவு:

சென்னை வடக்கு தணிக்கை மாவட்ட பதிவாளர் சீதாலட்சுமி, தாம்பரம் நிர்வாக மாவட்ட பதிவாளராகவும், தாம்பரம் தணிக்கை மாவட்ட பதிவாளர் சுனிதா, அம்பத்தூர் சார்பதிவாளராகவும், திண்டுக்கல் தணிக்கை மாவட்டப் பதிவாளர் பெரியசாமி, கோவை இணை சார்பதிவாளர் 1 ஆகவும், மார்த்தாண்டம் தணிக்கை மாவட்டப் பதிவாளர் செல்வக்குமாரி, பாளையங்கோட்டை நிர்வாக மாவட்டப் பதிவாளராகவும் பணியிட மாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

நாமக்கல் தணிக்கை மாவட்டப் பதிவாளர் சிவக்குமார், ஈரோடு இணை சார்பதிவாளர்1 ஆகவும், காரைக்குடி மாவட்டப் பதிவாளர் இயலரசி, திருச்சி இணை சார்பதிவாளர்1 ஆகவும், தஞ்சாவூர் தணிக்கை மாவட்டப் பதிவாளர் செந்தில்நாதன், திருச்சி தணிக்கை மாவட்ட பதிவாளராகவும் பணியிட மாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு அந்த உத்தரவில் கூறப்பட்டுள்ளது.

அதேபோல பதிவுத்துறை ஐஜி அருண் சுந்தர் தயாளன் வெளியிட்டுள்ள உத்தரவில் கூறியிருப்பதாவது:

கோபிச்செட்டிபாளையம் இணை 1 சார்பதிவாளர் ராஜமுனியப்பன், ஸ்ரீபெரும்புதூர் சார்பதிவாளராகவும், திருவள்ளூர் பேரம்பாக்கம் சார்பதிவாளர் முகமது ரபி, திருக்கழுக்குன்றம் சார்பதிவாளராகவும், கோவை வடவள்ளி சார்பதிவாளர் கிருஷ்ணசாமி, ஆவடி சார்பதிவாளராகவும், கோவை அன்னூர் சார்பதிவாளர் எஸ்.என்.ராஜா, செங்கல்பட்டு இணை 2 சார்பதிவாளராகவும் மாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

தென் சென்னை இணை 1 சார்பதிவாளராகவும், குன்றத்தூர் சார்பதிவாளர் கண்ணன், வேளச்சேரிக்கும், தென் சென்னை நிர்வாக சார்பதிவாளர் சரவணன், குன்றத்தூருக்கும் மாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

சென்னை நீலாங்கரை சார்பதிவாளர் சண்முகம், தென் சென்னை சீட்டு மற்றும் சங்கத்திற்கும், தென் சென்னை சீட்டு மற்றும் சங்க சார்பதிவாளர் அசோக்குமார், நீலாங்கரைக்கும் பணியிட மாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

இதேபோல், தமிழகம் முழுவதும் 43 சார்பதிவாளர்கள் பணியிட மாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

மராட்டியத்தில் சாத்தியமாகும் பயிர்க்கடன் தள்ளுபடி

தமிழகத்தில் சாத்தியமாகாதது ஏன்?

தவெக அரசுக்கு அன்புமணி கேள்வி

சென்னை, ஜூன் 4: பாமக தலைவர் அன்புமணி வெளியிட்ட அறிக்கை:

மராட்டியத்தில் 55.72 லட்சம் உழவர்களின் ரூ.36,585 கோடி பயிர்க்கடன்களை அம்மாநில அரசு தள்ளுபடி செய்திருக்கிறது. தமிழக அரசு அறிவித்துள்ள கடன் தள்ளுபடி திட்டத்தால் 14.22 லட்சம் பேர் பயனடைவர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. ஆனால், உண்மையில் சில ஆயிரம் பேருக்குக் கூட முழுமையான கடன் தள்ளுபடி கிடைக்காது.

பயிர்க்கடனை முழுமையாக தள்ளுபடி செய்ய முடியாது என்று நபார்டு வங்கி விதிகளில் எந்த இடத்திலும் கூறப்படவில்லை. பயிர்க்கடனை தள்ளுபடி செய்வதற்கு முன்பாக இந்திய ரிசர்வ் வங்கியிடமிருந்து அனுமதி பெற வேண்டும்; தள்ளுபடி செய்யப்பட்ட கடன் தொகையை சம்பந்தப்பட்ட கூட்டுறவு வங்கிகளுக்கு 60 நாள்களுக்குள் மாநில அரசு செலுத்த வேண்டும் என்பது தான் நபார்டு வங்கியின் விதியாகும்.

தமிழ்நாடு அரசுக்கு உழவர்கள் நலனில் அக்கறை இருந்திருந்தால் இந்த விதிகளை பின்பற்றி முழுக்கடனையும் தள்ளுபடி செய்திருக்க முடியும்.

அனிதா ராதாகிருஷ்ணனை அடையாளம் தெரியாதவர்களுடன் ஒப்பிடுவதா?

மொட்டை தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சு போடுவதா?

துரை வைகோவிற்கு கவிஞர் காசிமுத்துமாணிக்கம் கண்டனம்

சென்னை, ஜூன் 4: அனிதா ராதாகிருஷ்ணனை அடையாளம் தெரியாதவர்களுடன் ஒப்பிடுவதா?, மொட்டை தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சு போடுவதா?, கூவம் ஆறும் காவிரி நீரும் ஒன்றாகுமா? என்று துரை வைகோவிற்கு திமுக வர்த்தகர் அணி செயலாளர் காசி முத்து மாணிக்கம் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்ட அறிக்கை:

2006ல் திமுக ஆட்சி அமைப்பதற்கு நம்பிக்கை கோரும் தீர்மானத்திற்கு, கலைஞர் தன்னை எதிர்த்து நின்றவர்களிடம் ஆதரவு கேட்டு, ராஜினாமா செய்து வாருங்கள் என யாரையும் அழைக்கவில்லை. 2006ல் 96 சீட்டு திமுகவிடமும் அதன் தோழமையிடம் 72 வாக்கும் இருந்ததால், கலைஞரை முதல்வர் என்று சொல்லாமல் வெற்றி பெற்ற எந்த வேட்பாளரையும் கலைஞர் ஆதரவு வாக்கு கேட்கவில்லை. 1999ல் மூன்றாண்டுகளுக்கு பின் வரலாற்று மோதலில் அனிதா வெளியே வந்து தேர்தலில் நின்று திமுகவில் சேர்ந்து வெற்றி பெற்றார். தரணி போற்ற வாழ்ந்த அனிதாவை, தரையில் ஜெயலலிதா வீசி எறிந்த காலத்தில், திமுக அனிதாவை வாரி அணைத்துக் கொண்டது.

அதேபோல் மூன்றாண்டுக்கு பின் பிரிந்து வந்த தேனி ராமகிருஷ்ணனையும் திமுக சேர்த்துக் கொண்டதே தவிர, அது குதிரை பேரத்தில் அல்ல, தனது ஆட்சியை காப்பாற்றிட எவர் காலில் வீழ்ந்தாவது, பேரம் பேசி தனது அணிக்கு கொத்துக் கொத்தாக அழைத்துச் செல்வதற்கு பெயர் தான் குதிரை பேரம், துரதிருஷ்டவசமாக திமுக சின்னத்தில் போட்டியிட்டதாக மதிமுகவின் துரை வைகோ கூறுகிறார்.

ஏன் 2011 மாதிரி தனியே நின்று ‘0’ வாங்கிட வேண்டியதுதானே. யார் தடுத்தது?. 2026ல் உதயசூரியனில் நின்றது உங்கள் துரதிஷ்டவசம் என்றால் 2025ல் மீண்டும் துரோகிகளுக்கு ராஜ்ய சபா சீட் கொடுக்காதது எங்கள் அதிர்ஷ்டமா. அதிமுக சட்டமன்ற உறுப்பினர்கள் பதவியை ராஜினாமா செய்தது கட்சி தாவல் சட்டத்தில் வராது, என துரை வைகோ குறைக்கிறார்.

கொரடாவின் உத்தரவை மீறி வாக்களித்தால் எப்படி கட்சி தாவல் தடை சட்டத்தில் வராமல் இருக்கும். உங்களின் அன்பு முறியக் கூடாது என்பதற்காக உங்களால் நிராகரிக்கப்பட்டு மதிமுகவிலிருந்து விலகி வெளியே வந்த மல்லை சத்தியா, வல்லம் பஷீர், திருப்பூர் துரைசாமி, கழக குமார் போன்றோரை திமுகவில் தேர்தல் நேரத்தில் சேர்க்காமல் இருந்தோமே அதைக்கூட நினைத்துப் பார்க்காமல் நன்றி மறந்து பேசுகிறீர்களே.

2011ல், 2016ல் மதிமுக ஒன்றும் இல்லை என்கிற காலம் போய், 2021ல் 4 எம்எல்ஏ, 2026ல் 2 எம்எல்ஏ பெற்று தந்தோம்.

மகனை எதிர்த்தது தான் ராமதாசுக்கு இழப்பு, மகனை ஆதரித்து போவதால் அண்ணன் வைகோவுக்கு இழப்பு. கொடுத்த காசுக்கு மேல் கூவ வேண்டாம் துரை வைகோ. சலுகை வேண்டுமா தவெகவை பாராட்டுங்கள். திமுகவை திட்டாதீர்கள் துரை வைகோ. மேகதாது அணை பற்றியோ, வள்ளுவருக்கு காவி சாயம் பூசியது பற்றிய கண்டனமோ, 6 சிலிண்டர் பற்றியோ பேச வேண்டாம். தமிழ்த்தாய் வாழ்த்துக்கு ஏற்பட்ட அவமானம் குறித்து, மின்வெட்டு குறித்து, பெட்ரோல், டீசல் விலை ஏற்றத்தை பற்றியோ பேசவேண்டாம். அதிகம் படித்த மூஞ்சூறு கழனிப் பானையில் விழவேண்டாம் என, எனது அன்பான கண்டனத்தை துரை வைகோவிற்கு தெரிவித்துக் கொள்கிறேன். இவ்வாறு தெரிவித்துள்ளார்.

முதல்வருடன் கிரடாய் நிர்வாகிகள் சந்திப்பு

தமிழ்நாடு அரசு
GOVERNMENT OF TAMIL NADU

சென்னை தலைமை செயலகத்தில் முதல்வர் விஜய்யை கிரடாய் சென்னை அமைப்பின் தலைவர் மெஹுல் தோஷி, ஆலோசகர் சிவகுருநாதன், கிரடாய் நேஷனல் அமைப்பின் செயற்குழு உறுப்பினர் ஸ்ரீதரன், இணை செயலாளர் சுரேஷ் கிருஷ்ணன், கிரடாய் தமிழ்நாடு அமைப்பின் தலைவர் ஹபீப் மற்றும் நிர்வாகிகள் சந்தித்து பேசினர்.

குற்றங்களில் ஈடுபடுவோர் மீது கடும் நடவடிக்கை

சட்டம்-ஒழுங்கை காப்பதில் அலட்சியம் இருக்க கூடாது

அதிகாரிகளுக்கு முதல்வர் விஜய் அறிவுறுத்தல்

சென்னை, ஜூன் 4: தமிழகத்தில் சட்டம்-ஒழுங்கை பாதுகாப்பதில் எந்தவித அலட்சியமும் இருக்கக் கூடாது என அதிகாரிகளுக்கு முதல்வர் விஜய் அறிவுறுத்தியுள்ளார்.

தமிழகத்தில் சட்டம்-ஒழுங்கு நிலவரத்தை மேலும் வலுப்படுத்துவது, குற்றச் சம்பவங்களை கட்டுப்படுத்துவது மற்றும் போதைப் பொருள் நடமாட்டத்தை முற்றிலுமாக ஒழிப்பது தொடர்பாக முதலமைச்சர் விஜய் தலைமையில் நேற்று உயர்மட்ட ஆலோசனைக் கூட்டம், சென்னை தலைமை செயலகத்தில் நடைபெற்றது.

இதில் காவல்துறை உயர் அதிகாரிகள் மற்றும் உள்துறை தொடர்பான முக்கிய நிர்வாக அதிகாரிகள் பங்கேற்றனர். குறிப்பாக, தமிழ்நாடு காவல்துறை தலைமை இயக்குநர் மகேஷ் குமார் அகர்வால், கூடுதல் காவல் துறை தலைமை இயக்குநர் அன்பு உள்ளிட்ட அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில், மாநிலத்தின் அனைத்து மாவட்டங்களிலும் நிலவும் சட்டம்-ஒழுங்கு சூழல் குறித்து விரிவாக ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. மாவட்ட வாரியாக பதிவான குற்றச் சம்பவங்கள், அவற்றின் தன்மை, விசாரணையின் தற்போதைய நிலை மற்றும் காவல்துறை மேற்கொண்ட நடவடிக்கைகள் குறித்து முதலமைச்சர் அதிகாரிகளிடம் கேட்டறிந்தார். மேலும், பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்கள், கொலை, கொள்ளை, வழிப்பறி உள்ளிட்ட முக்கிய குற்றச் சம்பவங்கள் தொடர்பாக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்தும் விரிவாக விவாதிக்கப்பட்டதாக தகவல் வெளியாகியுள்ளது.

குறிப்பாக, தமிழகத்தில் போதைப் பொருள் நடமாட்டத்தை முழுமையாக கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள், போதைப் பொருள் கடத்தல் கும்பல்களை ஒடுக்குதல், பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்துதல். குற்றச் சம்பவங்கள் குறித்து காவல்துறை உடனுக்குடன் நடவடிக்கை எடுக்க வேண்டும். பொதுமக்களின் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில் கண்காணிப்பு மற்றும் ரோந்து பணிகளை மேலும் தீவிரப்படுத்த வேண்டும். சட்டம்-ஒழுங்கை பாதுகாப்பதில் எந்தவித அலட்சியமும் இருக்கக் கூடாது, குற்றங்களில் ஈடுபடுவோர் மீது கடுமையான மற்றும் துரிதமான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று அதிகாரிகளுக்கு முதலமைச்சர் அறிவுறுத்தியதாக தகவல் வெளியாகியுள்ளது.

சிறுபான்மையினர் மீதான உண்மை முகம் வெளிவந்து விட்டது

குர்பானி விவகாரத்தில் முதல்வர் இரட்டை வேடம்

■ என்ன பதில் சொல்லப்போகிறது ஐயூஎம்எல்?
■ முன்னாள் அமைச்சர் ஆவடி நாசர் கேள்வி

சென்னை, ஜூன் 4: திருவள்ளூர் மத்திய மாவட்ட திமுக செயலாளரும், முன்னாள் அமைச்சருமான ஆவடி சா.மு.நாசர் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

சிறுபான்மை இஸ்லாமிய சமுதாய மக்களின் காவல் அரணாக விளங்கிய திமுக அரசு இருந்தவரையில் எவ்வித தடையும் இன்றி நடைபெற்று வந்த பக்ரீத் திருநாள் குர்பானி வழங்கும் நிகழ்வுகளுக்கு, முதன்முறையாக தவெக ஆட்சியில் இடையூறு ஏற்பட்டு, மக்களின் மனத்தில் அழியா வடுவாக மாறியுள்ளது.

இந்நிலையில், திருச்சிக்குச் சென்ற முதல்வர் விஜய், மதச்சார்பற்ற கொள்கையில் உறுதியாக இருப்பேன், என்று வெற்றுக் கோஷம் எழுப்பியுள்ளார். காட்சிகளில் நடிப்பதும், ஆட்சி செய்வதும் வெவ்வேறானவை என்பதையே அறியாமல் இருக்கும் அவர், பக்ரீத் தினத்தில் தனிக்குழுக்கள் அமைத்து குர்பானிக்கு தடை ஏற்படுத்தியுள்ளார்.

போலீசை வைத்து உருட்டி மிரட்டி அந்த திருநாளை சோகநாளாக்கிய முதல்வர், ஆட்சி பொறுப்பேற்ற சில நாட்களிலேயே சிறுபான்மையினரின் சுதந்திரத்தில் கைவைத்து விளையாடி விட்டார், என ஒவ்வொரு சிறுபான்மையினரின் மனதிலும் வேதனை தீயாக கொழுந்து விட்டு எரிந்து கொண்டிருக்கிறது.

எரிகின்ற நெருப்பில் எண்ணெய் ஊற்றுவது போல் இப்போது அடுத்தகட்டமாக, நீதிமன்றத்தில் அரசின் சார்பில் பொது இடங்களில் குர்பானி கொடுப்பதற்கு தடை விதித்து உயர்நீதிமன்றம் அளித்த உத்தரவைக் கவனமாகவும், கண்ணும் கருத்துமாகவும் நிறைவேற்றியுள்ளோம், எனத் தீர்ப்பை நிறைவேற்றியதற்கான அறிக்கையையும் தாக்கல் செய்திருக்கிறது.

சிறுபான்மையினர் நலனில் பதவியேற்ற சில நாட்களில் தவெக அரசின் உண்மை முகம் வெளிச்சத்திற்கு வந்து விட்டது. “பூனைக்குட்டி வெளியே வந்து விட்டது” என்பது போல் முதல்வரின் இரட்டை வேடமும் வெளியே வந்து விட்டது. ஐ.யூ.எம்.எல் சார்பில் தவெக அரசில் சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சராக இருக்கும் ஷாஜஹான் அந்தத் தீர்ப்பை எதிர்த்து அப்பீல் செய்யப் போகிறோம் என்கிறார்.

போலீசை வைத்து குர்பானி நடத்த விடாமல் அடக்குமுறை செய்த போது இந்த அமைச்சர் எங்கே உறங்கிக் கொண்டிருந்தார். ஏன் முதல்வரை உடனே சென்று சந்தித்து இந்தத் தீர்ப்பை எதிர்த்து மேல்முறையீடு செய்ய வேண்டும் என்று கூறவில்லை, சிறுபான்மையினர் மீது போலீஸ் அடக்குமுறையை கைவிடுங்கள் என ஏன் கோரவில்லை.

ஏற்கனவே கிறித்தவ மக்களுக்கு எதிரான எப்.சி.ஆர்.ஏ.வுக்கு எதிராக ஒரு வார்த்தை கூட கூறாமல், ஒரு கண்டனத்தைக் கூட விடுக்காமல் அமைதி காத்தவர் தான் இதே முதல்வர் விஜய்.

குர்பானி விவகாரத்தில் நீதிமன்றத்தில் “தீர்ப்பை நிறைவேற்றி விட்டோம்” எனவும், “தீர்ப்பை எதிர்த்து மேல்முறையீடு” எனவும் தவெக அரசும், அதன் முதல்வர் விஜய்யும் போடும் இரட்டை வேடத்திற்கு ஐ.யூ.எம்.எல். என்ன பதில் சொல்லப் போகிறது. இசுலாமிய மக்களின் இந்தக் கேள்விகளுக்குப் பதில் கிடைக்குமா.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

டெல்லியில் சோனியா, ராகுலை முதல்வர் விஜய் சந்திக்காதது ஏன்?

காங்கிரஸ் மேலிட தலைவர் கிரிஷ் சோடங்கர் விளக்கம்

சென்னை, ஜூன் 4: சென்னை தலைமைச் செயலகத்தில் முதலமைச்சர் விஜயை, காங்கிரஸ் கட்சியின் மேலிட பொறுப்பாளர் கிரிஷ் சோடங்கர் நேற்று சந்தித்தார். அப்போது தமிழகத்தில் நடைபெறும் நாடாளுமன்ற, மாநிலங்களவை இடைத் தேர்தலில் போட்டியிடும் வாய்ப்பை காங்கிரசுக்கு ஒதுக்க வேண்டும் என்று கோரிக்கை வைத்தார்.

பின்னர், கிரிஷ் சோடங்கர் நிருபர்களிடம் கூறியதாவது:

நாடாளுமன்றத்தில் இடம் பெறுவது தவெகவிற்கு முதல் வாய்ப்பு என்றாலும், இந்த இடத்தை காங்கிரசுக்கு ஒதுக்குவது குறித்து தீவிரமாக பரிசீலித்து வருவதாக முதல்வர் உறுதி அளித்துள்ளார். முதல்வர் விரைவில் இதற்கான அறிவிப்பை வெளியிடுவார். மேலும், இந்த இடம் காங்கிரஸ் கட்சிக்கு ஒதுக்கப்படும் என்பதில் நாங்கள் உறுதியாக இருக்கிறோம். இதைத் தவிர வேறு எந்த விஷயத்தை பற்றியும் நாங்கள் விவாதிக்கவில்லை. ஏனெனில், மாநிலங்களவையில் எங்களின் பலத்தை அதிகரிக்க நாங்கள் விரும்புகிறோம். எனவே, நாடாளுமன்றத்தில் எங்கள் ராஜ்ய சபா பலத்தை வலுப்படுத்த வேண்டும் என்பதை நாங்களும் முதலமைச்சரிடம் வலியுறுத்தினோம். எங்கள் கோரிக்கையை தீவிரமாக பரிசீலித்து வருவதாக முதலமைச்சர் கூறினார்.

கோவாவை சேர்ந்த பலர் வேளாங்கண்ணிக்கு வருகை தருகிறார்கள். அங்கு தங்குமிடம் தொடர்பான சில சிக்கல்கள் உள்ளன. எனவே, முதல்வர் விஜய் அதை பரிசீலிக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொண்டேன். திமுக இன்னும் இந்தியா கூட்டணியில் தான் நீடிக்கிறது. மேலும் திமுக இந்தியா கூட்டணியின் மிக முக்கிய அங்கமாக இருந்தது. எனவே, எதிர்காலம் குறித்து இப்போது எந்த கருத்தும் கூற முடியாது.

கேரளாவில் நடந்த பதவியேற்பு விழா மற்றும் டெல்லி வந்தபோது சோனியா காந்தி, ராகுல் காந்தியை முதல்வர் சந்திக்காதது ஏன் என்று கேட்கிறீர்கள். இது குறித்து சில குழப்பங்கள் இருப்பதாக நினைக்கிறேன். சரியான நேரம் இல்லாத காரணத்தால் முதல்வர் சந்திக்காமல் டெல்லியில் இருந்து சென்றுள்ளார். மேலும், டெல்லி பயணம் குறித்து சிலர் தேவையில்லாமல் குழப்பத்தை ஏற்படுத்த முயல்கிறார்கள்.

இவ்வாறு அவர் கூறினார்.

கர்நாடக புதிய முதல்வர்

டி.கே.சிவகுமாருக்கு விஜய் வாழ்த்து

சென்னை, ஜூன் 4: கர்நாடக மாநிலத்தின் புதிய முதல்வராக பொறுப்பேற்றுள்ள டி.கே.சிவகுமாருக்கு, தமிழக முதல்வர் விஜய் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து முதல்வர் விஜய் நேற்று வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவு:

கர்நாடக மாநிலத்தின் புதிய முதல்வராக பொறுப்பேற்றுள்ள டி.கே.சிவகுமாருக்கு எனது மனமார்ந்த வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

pnb Housing Finance Limited
Ghar Ki Baat

பிற்சேர்க்கை–IV–A அசையாச் சொத்து/களின் மின்–ஏலம் பொது விற்பனை அறிவிப்பு

கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 இன் விதி 8(6) விதிமுறையுடன் பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம் 2002 கீழ் அசையாச் சொத்துகள் விற்பனைக்கான மின்–ஏலம்–விற்பனை அறிவிப்பு

பதிவு அலுவலகம்:- 9ஆவது தளம், அந்தரிக்ஷ் பவன், 22, கே.ஜி. மார்க், புதுடெல்லி-110 001, தொலைபேசிகள்: 011-23357171, 23357172, 23705414, இணையதளம்: www.pnbhousing.com

கிளை முகவரி: C 45, முதல் தளம் திரு.வி.க. இண்டஸ்ட்ரியல் எஸ்டேட், கிண்டி, சென்னை - 600032, தமிழ்நாடு. கிளை முகவரி: 1வது தளம், ஜிஎஸ்டி சாலை, தாம்பரம் மேற்கு, சென்னை - 600045.

இதன்மூலம் பொதுமக்களுக்குப் பொதுவாக மேலும் நிரல் எண்–A இல் குறிப்பிட்டுள்ள கடன்தாரர்(கள்) & ஜாமீன்தாரர்(கள்) ஆகியோருக்குக் குறிப்பிட்டு வழங்கப்படும் அறிவிப்பாவது கடனீட்டுக் கடனீந்தோரிடம் அடமானம்/உரிமை அளிக்கப்பட்ட, M/s. பினன்பி ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்/ கடனீட்டுக் கடனீந்தோரின் அதிகாரப்பூர்வ அதிகாரியால் ஆக்கப்பூர்வ/கையக சுவாதீனம் (நிரல் எண்–C இல் விவரிக்கப்பட்டவாறு) செய்யப்பட்டிருக்கும் நிரல் எண்–D இல் குறிப்பிட்டுள்ள கீழே விவரிக்கப்பட்ட அசையாச் சொத்து(கள்) ஆனது, கீழே குறிப்பிட்ட விவரங்களின்படி “உள்ளது உள்ளவிடத்தில், உள்ளது உள்ளவாறு மேலும் உள்ளது எதுவோ அது அடிப்படையில்” விற்பனை செய்யப்பட உள்ளது. நாளது தேதியத் திருத்தப்படி கடனீட்டுச் சொத்து உரிமை அமலாக்கம் விதிகள், 2002 இன் விதி 8(6) & 9 கீழ் நிரல் எண்–A இல் குறிப்பிட்டவாறு கடன்தாரர்(கள்)/அடமானதாரர்(கள்)/ சம்பந்தப்பட்ட கடன்தாரர்/ அடமானதாரர்(கள்) (இறந்தது முதல்) அவர்களின் சட்டப்பூர்வ வாரிசுகள், சட்டப்பூர்வ பிரதிநிதி, (தெரிந்தது அல்லது தெரியாதது), நிறைவேற்றுநர்(கள்), நிர்வாகி(கள்), வாரிசு(கள்), உரிமையுற்றோர்(கள்) ஆகியோருக்கு இதன்மூலம் அறிவிப்பு வழங்கப்படுகிறது. விரிவான விற்பனை விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு, M/s. பினன்பி ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெடின்/கடனீட்டுக் கடனீந்தோரின் இணையதளம் அதாவது, www.pnbhousing.com இல் கொடுக்கப்பட்டுள்ள இணைப்பினைப் படிக்கவும்.

கடன் எண்/ கடன்தாரர்/ உப-கடன்தாரர்/ ஜாமீன்தாரர்(கள்)/ சட்டப்பூர்வ வாரிசுகள் பெயர் (A)	கோரப்பட்ட தொகை & நாள் (B)	சுவாதீன தன்மை (C)	அடமானச் சொத்துகள் விவரம் (D)	நிர்ணய விலை (RP) (E)	முன்வைப்புத் தொகை (நிர்ணய விலையின் 10%) (F)	ஏலப்புள்ளி சமர்ப்பிக்க கடைசி நாள் (G)	ஏலம் உயர்த்தும் விகிதம் (H)	பார்வையிடும் நாள் & நேரம் (I)	ஏலம் நாள் & நேரம் (J)	தெரிந்த வில்லங்கங்கள்/ நீதிமன்ற வழக்குகள் ஏதேனுமிருந்தால், (K)
HOU/CHE/0916/320114 & NHL/CHE/0916/320445, ஜி குமார் / எல் சுஜாதா, கி.அ.: சென்னை	Rs. 22,74,824.51 & 25.04.2024	கையக	பிளாட் எண். 3B, மூன்றாம் தளம், கோர் I, VGN எர்னஸ்ட், மேல்பாக்கம், கண்ணப்பாளையம், தமிழ்நாடு – 600077.	Rs. 14,35,000	Rs. 1,43,500	22.06.2026	Rs. 10,000	10.06.2026 11:00 AM to 05:00 PM	23.06.2026 02:00 PM to 03:00 PM	அறியப்படாதது
HOU/OMR/0117/348925 & NHL/OMR/0119/638397 சந்திரகாந்த் AP / ஸ்ரீஜா V R, கி.அ.: OMR	Rs. 34,66,185.11 & 25.04.2024	கையக	ஐ பிளாக், 1வது தளம், யூனிட் எண். 11–109, ஹேப்பினஸ்ட், பிளாக் எண். 84, வார்டு 1, பருத்திப்பட்டு கிராமம், பூந்தமல்லி தாலுக்கா, திருவள்ளூர் மாவட்டம், ச. எண். 463/1, 463/2, 489/1, 489/2A, 486, 480/2, 488 5வது குறுக்குத் தெரு, கேந்திரிய விஹார் பின்புறம், சென்னை, தமிழ்நாடு – 600071.	Rs. 18,89,000	Rs. 1,88,900	22.06.2026	Rs. 10,000	10.06.2026 11:00 AM to 05:00 PM	23.06.2026 02:00 PM to 03:00 PM	அறியப்படாதது
HOU/TBM/0622/1000908, நைனா முகமது / ஜன்னத் பீவி முகமது அலி ஜின்னா, கி.அ.: தாம்பரம்	Rs. 49,62,533.00 & 11.05.2023	கையக	பிளாட் எண். 4 F3, 1வது தளம், பழைய எண். 100 (புதிய எண். 88), பிரசாந்தி நகர், சென்னை, தமிழ்நாடு – 600075.	Rs. 28,13,000	Rs. 2,81,300	22.06.2026	Rs. 10,000	10.06.2026 11:00 AM to 05:00 PM	23.06.2026 02:00 PM to 03:00 PM	அறியப்படாதது
HOU/OMR/0722/1015684 கிர்த்திகா ஸ்ரீ / சி ஜே ஆனந்தி ஸ்ரீம், கி.அ..: ஓ.எம்.ஆர்	Rs. 37,81,156 & 18.04.2023	கையக	பிளாட் எண். 4, 1வது தளம், பிளாட் எண். 47, 48, 49, டிஎஸ்ஆர் விவந்தா, டிஎஸ்ஆர் செல்வி அனெக்ஸ், நின்னக்கரை கிராமம், மறைமலை நகர், சென்னை, தமிழ்நாடு – 603209.	Rs. 22,45,000	Rs. 2,24,500	22.06.2026	Rs. 10,000	10.06.2026 11:00 AM to 05:00 PM	23.06.2026 02:00 PM to 03:00 PM	அறியப்படாதது
HOU/TBM/1221/940245 அனுசங்கரி எம் / வேல்முருகன் எம், கி.அ.: தாம்பரம்	Rs. 63,90,093.88 & 25.04.2024	கையக	பிளாட் எண். 4ஜி1, பழைய எண். 100, புதிய எண். 88, பிரசாந்தி நகர், பம்மல், சென்னை. தமிழ் நாடு – 600075	Rs. 28,35,000	Rs. 2,83,500	22.06.2026	Rs. 10,000	10.06.2026 11:00 AM to 05:00 PM	23.06.2026 02:00 PM to 03:00 PM	அறியப்படாதது
HOU/OMR/0117/346880 பார்த்தசாரதி ஏ / கல்பனா பி, கி.அ.: ஓ.எம்.ஆர்	Rs. 39,98,726.00 & 04.09.2024	கையக	பிளாட் எண். F2, 1வது தளம், பிளாட் எண். 60, பிளாக் எண். A, சுபம் பிளாட்ஸ், வசந்தம் நகர், திருநின்றவூர், பூந்தமல்லி தாலுக்கா, சென்னை, தமிழ்நாடு – 602024	Rs. 13,94,000	Rs. 1,39,400	22.06.2026	Rs. 10,000	10.06.2026 11:00 AM to 05:00 PM	23.06.2026 02:00 PM to 03:00 PM	அறியப்படாதது
HOU/OMR/0525/1385839 மணி எல் வி / அனிருத் லக்ஷ்மன், கி.அ.: ஓ.எம்.ஆர்	Rs. 34,60,856 & 04.02.2026	அடையாள பூர்வ	பிளாட் எண். E, 2வது தளம், தெற்குப் பக்க பிளாட், ஸ்ரீ சக்தி கிருஷ்ணா அடுக்குமாடி குடியிருப்பு, ராஜேந்திர நகர், செட்டிபுண்ணியம், செங்கல்பட்டு, சென்னை, தமிழ்நாடு – 603204	Rs. 36,75,000	Rs. 3,67,500	13.07.2026	Rs. 10,000	18.06.2026 11:00 AM to 05:00 PM	14.07.2026 02:00 PM to 03:00 PM	அறியப்படாதது

*பொருந்துமாறு ஆண்டுக்கு 18% விகிதத்தில் மேற்கொண்டு வட்டி, அதற்கான பணப்பட்டுவாடா மற்றும்/அல்லது பணமாக்கும் தேதி வரை ஏற்பட்ட சாதாரண செலவினங்கள், செலவு கட்டணங்கள் ஏனையவற்றுடன் சேர்த்து. ** பினன்பி ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெடின் அதிகாரப்பூர்வ அதிகாரிக்கு நன்கு தெரிந்த மற்றும் அறிந்த வரையில், நிரல் எண்–K இல் அறிவிக்கப்பட்டது தவிர்த்து மேற்குறிப்பிட்ட அசையா/கடனீட்டுச் சொத்துகள் தொடர்பான பிற வில்லங்கங்கள்/ கோருரிமைகள் இல்லை. மேற்கொண்டு இவ்வித வில்லங்கங்கள் ஆனது வெற்றிபெறும் கொள்முதலாளர்/ ஏலதாரர் மூலம் அவருடைய தரப்பில் வழங்கப்பட/செலுத்தப்பட வேண்டும். எதிர்நோக்கும் கொள்முதலாளர்(கள்)/ ஏலதாரர்கள் குறிப்பிட்டுள்ள வில்லங்கங்களின் உண்மைத்தன்மையை தனிப்பட்டு உறுதிப்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.
1. நாளது தேதிப்படி, மேற்கூறிய அசையாச் சொத்துகள்/கடனீட்டுச் சொத்துகளை விற்பனை செய்தல், உரிமை மாற்றுதல் மேலும்/அல்லது விற்றுத் தீர்ப்பதற்கு பினன்பி ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்/ பின்னன்பி ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெடின் அதிகாரப்பூர்வ அதிகாரியை தடுக்கும் நிரல் எண்– K இல் குறிப்பிடப்பட்ட ஆணை மேலும்/அல்லது நீதிமன்ற தடையுத்தரவு எதுவுமில்லை. 2. எதிர்நோக்கும் கொள்முதலாளர்/ஏலதாரர் மற்றும் விருப்பமுள்ள நபர்கள் பினன்பி ஹவுசிங் பைனானஸ் லிமிடெட் வசமிருக்கும் அதற்கு தொடர்பான உரிமைப்பத்திரத்திரன் ஆவணப் பத்திரம் உட்பட ஆனால் வரம்புக்குட்படாது நிரல் எண்– K இல் தெரிவிக்கப்பட்ட செயல்பாட்டிலுள்ள வழக்குகள்/ வழங்கப்பட்ட ஆணைகள் ஏனையவை ஏதேனுமிருந்தால் அவற்றை தனிப்பட்டு ஆய்வு செய்து கொள்ளலாம். மேலும் ஒப்பந்தப்புள்ளி/ஏலப்புள்ளி விண்ணப்பப் படிவம் சமர்ப்பிக்கும் முன்பு அல்லது ஒப்பந்தப்புள்ளி(கள்) வழங்கும் முன்பு அனைத்து விதத்திலும் தாமாகவே திருப்தியுற வேண்டும். ஏலதாரர்(கள்) ஏலப்புள்ளிப் படிவத்துடன் இந்த ஏலத்தின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளில் கையொப்பமிட வேண்டும். 3. கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 இன் விதி 9(3) இன்படி, ஏலதாரர்(கள்)/ கொள்முதலாளர் அதே நாளில் அல்லது அடுத்த வேலை நாளுக்கு மிகாமல் விற்பனை விலையின் 25% தொகையை, (முன்வைப்புத்தொகை ஏதேனும் செலுத்தப்பட்டிருந்தால் அவை உட்பட) செலுத்துவதற்கு சட்டப்பூர்வமாக கட்டுப்பட்டவர். கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 இன் விதி 9(2) இன்படி கடனீட்டுக் கடனீந்தோர் மூலம் விற்பனை விலையின் 25% பெற்ற பிறகு மட்டும் ஏலதாரர்(கள்) பெயரில் விற்பனை உறுதிப்படுத்தப்படும். விற்பனை பரிசீலனைத் தொகையின் மீதி 75% ஆனது விற்பனை உறுதிக் கடிதம் ஒப்புகைத் தேதியிலிருந்து 15 நாட்களுக்குள் கொள்முதலாளரால் செலுத்தப்பட வேண்டும். அவ்வாறு செலுத்தத் தவறினால், விற்பனை உறுதிப்படுத்தல் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள 15 நாட்கள் கட்டாயக் காலம் முடிவடைந்த நாளிலிருந்து 15 நாட்களுக்குள், அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி விற்பனைப் பரிசீலனைத் தொகையின் பகுதிப் பணத்தைப் பறிமுதல் செய்வார், மேலும் சொத்து/கடனீட்டு சொத்து சர்ஃபாசி சட்டத்தின் விதிகளின்படி மறுவிற்பனை செய்யப்படும். 4. M/s. ஃபோர்குளோசர்இந்தியா.காம் மின்–ஏலம் மூலம் விற்பனை மேற்கொள்வதில் அதிகாரப்பூர்வ அதிகாரிக்கு உதவும். சொத்து பார்வையிடுதல் அல்லது ஏலப்புள்ளி ஆவணங்கள் பெறுதல் தொடர்பான அனைத்து உதவிக்கு மேலும் ஏதேனும் பிற விசாரணைக்கு அல்லது பதிவுபெறுவதற்கு, நீங்கள் 605 ஏ, 6ஆவது தளம், மைத்ரிவனம், அமீர்பேட், ஹைதராபாத்–500038, இணையதளம்–info@bank.eauctions.in இடத்தில் அதன் தலைமை அலுவலகம் கொண்டிருக்கும் பினன்பி ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெடின் அதிகாரப்பூர்வ நபரை திரு. ஏங்கெல்ஸ்/ துர்கேஷ்/ ஜோதிகண்ணன்/ ஸ்ரீ சரண், செல்பேசி: 9344007827 / 9042840151/ 9840487424 / 9738931789, மின்னஞ்சல்: auction@pnbhousing.com அல்லது www.pnbhousing.com – ஐ காணவும்.

இடம்: சென்னை ,ஓஎம்ஆர், தாம்பரம் ,நாள்: 03.06.2026
ஒப்/– அதிகாரப்பூர்வ அதிகாரி, பினன்பி ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்

IndusInd Bank
இன்டஸ்இன்ட் பேங்க் லிமிடெட்
எம்பஸ்ஸி ஹைட்ஸ், பிளாக் பி, 3 ஆவது தளம், 13, எம்சி.கிராத் ரோடு, பெங்களூரு–560025, இந்தியா, தொலைபேசி: (0080) 46677300.
பதிவு அலுவலகம்: 2401, ஜெனரல் திம்மையா சாலை, புனே–411001, இந்தியா, தொலைபேசி: (020) 2634 3201, ஃபேக்ஸ்: (020) 2434 3241, www.indusind.com இல் காணுங்கள்,
CIN: L65191PN1994PLC076333

சுவாதீன அறிவிப்பு (அசையா சொத்துக்காக)

இவ்வாறிருக்க, இதன் அடிப்படையில், இண்டஸ்இண்ட் வங்கி லிமிடெட்டின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, நிதிச் சொத்துக்களைப் பத்திரமாக்குதல் மற்றும் மறுசீரமைப்பு மற்றும் பாதுகாப்பு வட்டி அமலாக்கச் சட்டம், 2002–இன் கீழ் மற்றும் பாதுகாப்பு வட்டி (அமலாக்கம்) விதிகள், 2002–இன் விதி 3 உடன் சேர்த்துப் படிக்கப்படும் பிரிவு 13(12)–இன் கீழ் வழங்கப்பட்ட அதிகாரங்களைப் பயன்படுத்தி, கடன் வாங்கியவரான M/s பிரகாஷ் கோல்ட் பேலஸ் பிரைவேட் லிமிடெட் மற்றும் தனிப்பட்ட ஜாமீன்தாரர்களான **திரு. பிரகாஷ் சந்த் ஜெயின், திரு. முகேஷ் குமார் ஜெயின், திருமதி. சூரஜ் குமாரி ஜெயின், திருமதி. பிரமீலா ஜெயின், திரு. அபிலாஷ் முத்தா, திருமதி. மம்தா அபிலாஷ் முத்தா மற்றும் கார்ப்பரேட் ஜாமீன்தாரரான M/s சூர்யா பிரகாஷ் ஹோட்டல்ஸ் பிரைவேட் லிமிடெட் ஆகியோருக்கு 04.12.2025 தேதியிட்ட கோரிக்கை அறிவிப்பை வெளியிட்டார். அந்த அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள மொத்தத் தொகையான 30.11.2025 அன்றுள்ள நிலவரப்படி ரூ. 3,42,51,549/– (மூன்று கோடி நாற்பத்திரண்டு இலட்சம் ஐம்பத்தொரு ஆயிரம் ஐநூற்று நாற்பத்தொன்பது மட்டும்) தொகையை, M/s பிரகாஷ் கோல்ட் பேலஸ் பிரைவேட் லிமிடெட்** பெயரில் உள்ள கணக்கு எண்களில், **01.12.2025** முதல் பணம் செலுத்தும் தேதி வரையிலான ஆவணப்படுத்தப்பட்ட வட்டி விகிதத்திலான கூடுதல் வட்டி மற்றும் அதற்கான இதர செலவுகளுடன் சேர்த்து, மேற்கூறிய அறிவிப்பைப் பெற்ற நாளிலிருந்து 60 நாட்களுக்குள் செலுத்த வேண்டும் என்று கோரிக்கை விடுத்திருந்தார்.

கடன்தாரர் மற்றும் ஜாமீன்தாரர்கள் தொகையைத் திருப்பிச் செலுத்தத் தவறியதால், **2026 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 03** ஆம் தேதியன்று, மேற்கூறிய விதிகளின் விதி 8 உடன் சேர்த்துப் படிக்கப்படும் மேற்கூறிய சட்டத்தின் பிரிவு 13(4)–இன் கீழ் தமக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களைப் பயன்படுத்தி, கீழே விவரிக்கப்பட்டுள்ள சொத்தை **சுவாதீனம் செய்துள்ளார்** என்று கடன்தாரர் மற்றும் ஜாமீன்தாரர்களுக்கு இதன்மூலம் அறிவிக்கப்படுகிறது.

கடன்தாரர்மற்றும் ஜாமீன்தாரர்கள் இந்தச் சொத்துடன் எந்தவொரு கொடுக்கல் வாங்கலிலும் ஈடுபட வேண்டாம் என இதன்மூலம் எச்சரிக்கப்படுகிறார்கள். மேலும், இந்தச் சொத்துடன் செய்யப்படும் எந்தவொரு கொடுக்கல் வாங்கலுக்கும், **30.11.2025 அன்றுள்ள நிலவரப்படி ரூ.3,42,51,549/– தொகையும், அதனுடன் 01.12.2025** முதல் கூடுதல் வட்டியும், அத்துடன் அது தொடர்பான செலவுகள், கட்டணங்கள் மற்றும் இதர செலவினங்களும் இண்டஸ்இண்ட் வங்கி லிமிடெட்டின் கட்டணமாக விதிக்கப்படும்.

கடனீட்டு சொத்துக்களை மீட்கக் கிடைக்கும் நேரம் தொடர்பாக, SARFAESI சட்டத்தின் பிரிவு 13 இன் துணைப் பிரிவு (8) இல் உள்ள விதிகளுக்கு கடன் வாங்குபவரின் கவனம் ஈர்க்கப்படுகிறது.

அசையா சொத்துகளின் விவரங்கள்: இனம் எண்.1 (M/s பிரகாஷ் கோல்ட் பேலஸ் பிரைவேட் லிமிடெடிற்குச் சொந்தமான அசையா சொத்து): பகுதி– A: கதவு எண்.37, முன்னதாக பழைய எண். 4 பகுதி, தாமோதரன் தெரு, வெள்ளாள தேனாம்பேட்டை, சென்னை– 600 086, தற்போது புதிய எண். 124, பழைய எண். 22B, கதீட்ரல் சாலை, சென்னை–600 086 இல் C.C.No. 1453, O.S.No. 3125, R.S.No. 1300 பகுதி ஆகியவற்றில் பட்டா R.S.No. 1300/1, பிளாக் எண். 26–இன் படி மயிலாப்பூர்–திருவல்லிக்கேணி தாலுகா, மயிலாப்பூர்/தேனாம்பேட்டை கிராமத்தில் அடங்கியுள்ள இதன் பரப்பளவு 766 1½ சதுர அடி மற்றும் பட்டாவின்படி 712 சதுர அடி பரப்பளவாகும். இது அமைந்துள்ளது. இதன் எல்லைகள்: வடக்கில்: திருமதி. மரியா சூசை இல்லம், R.S.No.1299, தெற்கில்: திரு. தாமோதர் பிள்ளையின் வீடு, R.S.No. 1301 பகுதி, கிழக்கில்: திரு. டி. மகாதேவ்சிங்கிற்குச் சொந்தமான நிலம், பின்னர் தாமோதர் தெரு, மேற்கில்: கதீட்ரல் சாலை, R.S.No. 1302. அளவீடு: வடக்கிலிருந்து தெற்காக கிழக்குப் பக்கம்: 21 1½ அடி, வடக்கிலிருந்து தெற்காக மேற்குப் பக்கம்: 15 அடி, கிழக்கிலிருந்து மேற்காக வடக்கு பக்கம்: 45 அடி, கிழக்கிலிருந்து மேற்காக தெற்கு பக்கம்: 39 அடி. இது மத்திய சென்னை பதிவு மாவட்டம் மற்றும் மத்திய சென்னை இணை–I துணைப் பதிவு மாவட்டத்திற்குள் அமைந்துள்ளது.

பகுதி–B: பழைய கதவு No. 2, புதிய No. 18, தாமோதரன் தெரு, தேனாம்பேட்டை, கோபாலபுரம், சென்னை– 600 086 என்ற முகவரியில் அமைந்துள்ள, R.S.No. 1300 பகுதி, பட்டா C.A.240/64–65, நாள் 29.09.1964, R.S.No.1300/2, பிளாக் எண்.26 மயிலாப்பூர்/தேனாம்பேட்டை கிராமத்தில் ஆவணத்தின்படி 832 1½ சதுர அடியும், பட்டாவின்படி 723 சதுர அடியும் பரப்பளவும் உள்ள அனைத்து துண்டு மற்றும் பகுதி உள்ள நிலம் மற்றும் கட்டிடம் உள்ள சொத்து. எல்லைகள்: வடக்கில்: திருமதி. மரியா சூசை வீடு, R.S.No. 1299, தெற்கில்: திரு. தாமோதரன் வீடு, R.S.No. 1301/1, கிழக்கில்: தாமோதரன் தெரு, மேற்கில்: திரு. ஆண்டனி தேவதாஸ் வீடு, R.S.No.1300/2. இது மத்திய சென்னை பதிவு மாவட்டம் மற்றும் மத்திய சென்னை இணை–1 துணைப் பதிவு மாவட்டத்திற்குள் அமைந்துள்ளது.

பகுதி–C: கதவு எண். 13, பழைய எண். 1, தாமோதரன் தெரு, வெள்ளாள தேனாம்பேட்டை, கோபாலபுரம், சென்னை–600 086, தற்போது கதவு எண். 37/1, புதிய எண். 122, கதீட்ரல் சாலை, சென்னை–600 086, C.C.No.118, O.S.No.3125, R.S.No.ஆகியவற்றில் அடங்கியுள்ள நிலப்பகுதி மற்றும் அதன் மீதான கட்டிடம் அனைத்தும். 1301/1, பட்டா எண். 466/1989, பிளாக் No. 26, மயிலாப்பூர் கிராமம்/கோட்டம், மயிலாப்பூர் – திருவல்லிக்கேணி தாலுகாவில் அமைந்துள்ள 1 கிரவுண்ட் 77 ச.அடி பரப்பளவு உள்ள அனைத்து துண்டு மற்றும் பகுதி உள்ள நிலம் மற்றும் கட்டிடம் உள்ள சொத்து. இதன் எல்லைகள்: வடக்கில் R.S.No.1300 (1300/1 & 1300/2), தெற்கில்: R.S.No.1301/2 & 1302, கதீட்ரல் சாலை, கிழக்கில்: R.S.1289 மற்றும் மேற்கில் R.S.No.1302. அளவீடு: வடக்கிலிருந்து தெற்காக கிழக்குப் பக்கம்: 42 அடி, வடக்கிலிருந்து தெற்காக மேற்குப் பக்கம்: 49 அடி, கிழக்கிலிருந்து மேற்காக வடக்கு பக்கம்: 73 அடி, கிழக்கிலிருந்து மேற்காக தெற்கு பக்கம்: 44 அடி. இது மத்திய சென்னை பதிவு மாவட்டம் மற்றும் மத்திய சென்னை இணை–1 துணைப் பதிவு மாவட்டத்திற்குள் அமைந்துள்ளது.

இனம் எண்.2: (திருமதி. பிரமீளா ஜெயினுக்குச் சொந்தமான அசையாச் சொத்து): கதவு எண். 134, பழைய கதவு எண். 191, சென்னை – 600079, O.S.No. 2031, R.S.No. 10677, பிளாக் எண். 86, C.C.No. 6402, சௌகார்பேட்டை, என்.எஸ்.சி. போஸ் சாலையில் (முன்னர் சைனா பஜார் சாலை என அழைக்கப்பட்டது) அமைந்துள்ள 1470 சதுர அடி பரப்பளவுள்ள பகுதி உள்ள நிலம் மற்றும் கட்டிடம் உள்ள அனைத்தும் அடங்கிய சொத்து. எல்லைகள்: வடக்கில்: R.S.No.10681, தெற்கில்: என்.எஸ்.சி. போஸ் சாலை (முன்னர் சைனா பஜார் சாலை என அழைக்கப்பட்டது), பிளாக் எண். 76, கிழக்கில்: R.S.No.10676, மேற்கில்: R.S.No.10678. வட சென்னை துணைப் பதிவு மாவட்டம், சௌகார்பேட்டை பதிவு மாவட்டத்திற்குள் அமைந்துள்ள சொத்து.

இனம் எண்.3: (M/s பிரகாஷ் கோல்ட் பேலஸ் பிரைவேட் லிமிடெடிற்குச் சொந்தமான அசையா சொத்து): பழைய கதவு No. 82, புதிய கதவு No. 144, புரசைவாக்கம் நெடுஞ்சாலை, கீழ்ப்பாக்கம், சென்னை– 600010, O.S.Nos.60 மற்றும் 64, பழைய R.S.No. 3045 மற்றும் தற்போதைய R.S.No. 3045/2 ஆகியவற்றில் அடங்கியுள்ள 3349.50 சதுர அடி (பட்டா நிலத்தின்படி 1 கிரவுண்ட் மற்றும் 926 சதுர அடி) பரப்பளவு உள்ள வீடு, தளம் மற்றும் வளாகத்தின் தெற்குப் பகுதியில் அமைந்துள்ள சொத்து. எல்லைகள்: வடக்கு: திரு. ஒய்.டி. லட்சுமிக்குச் சொந்தமான நிலம் மற்றும் கட்டிடம், தெற்கு: புரசைவாக்கம் நெடுஞ்சாலை, கிழக்கு: திரு. ஒய்.டி. லட்சுமிக்குச் சொந்தமான நிலம் மற்றும் கட்டிடம், மேற்கு: ஊழல் கண்காணிப்பு இயக்குநரின் தனியார் சாலை. இந்த சொத்து புரசைவாக்கம் துணைப் பதிவு மாவட்டம் மற்றும் சென்னை மத்தியப் பதிவு மாவட்டத்திற்குள் அமைந்துள்ளது.

இனம் எண்.4: (திருமதி. மம்தா அபிலாஷ் முத்தாவுக்குச் சொந்தமான அசையா சொத்துகள்): i) 416.34 ச.அடி பரப்பளவு உள்ள வீடு மற்றும் கடை எண்.136 உள்ள வளாகம், தற்போதைய கதவு எண்.136, என்.எஸ்.சி. போஸ் சாலை (முந்தைய பழைய கதவு No.103, பெருமாள் முதலி தெரு), சென்னை – 600 079 இல் உள்ள கட்டிடத்தின் தரை தளத்தில் அமைந்துள்ள, பொதுப் பங்குப் பகுதி உள்ளடங்கியதாகும். C.C.No. 4276, O.S.No. 2669, R.S.No.10642/1, பிளாக் எண்.76, வ.உ.சி. நகர், கோட்டை – தண்டையார்பேட்டை தாலுகா, சென்னை மாவட்டம் ஆகியவற்றில் அடங்கியுள்ள 2529 சதுர அடி நிலத்தில் 145.71 சதுர அடி பிரிக்கப்படாத பங்குடன் கூடிய சொத்து. எல்லைகள்: வடக்கில்: R.S.No.10643/1, தெற்கில்: R.S.No.10642/3 மற்றும் 4, என்.எஸ்.சி. போஸ் சாலை, கிழக்கில்: R.S.No.10642/5 மற்றும் 10642/3, மேற்கில்: பெருமாள் முதலி தெரு. சௌகார்பேட்டை துணை பதிவு மாவட்டம் மற்றும் சென்னை வடக்கு பதிவு மாவட்டத்தில் அமைந்துள்ள இந்த சொத்து, சென்னை மாநகராட்சியின் எல்லைகளுக்குள் உள்ளது.

ii) மாநகராட்சி பழைய கதவு எண். 48E, புதிய கதவு No. 105E, புரசைவாக்கம், பிரிக் க்ளின் சாலை (பொன்னியம்மன் தெரு என்றும் அழைக்கப்படுகிறது), சென்னை 600 007 அமைந்துள்ளதும், R.S.No. 2870/2, பிளாக் எண். 44, புரசைவாக்கம் கிராமம், புரசைவாக்கம் – பெரம்பூர் தாலுகா, சென்னை மாவட்டம், பட்டாவின்படி C.A.No. 1053/2008 இல் உள்ள ஆவணத்தின்படி 4 கிரவுண்ட் மற்றும் 1649 சதுர அடி பரப்பளவும், நேரடியான அளவீட்டின்படி 4 கிரவுண்ட் மற்றும் 802 சதுர அடி பரப்பளவும் கொண்ட நிலத்தின் எல்லைகள்: வடக்கில்: ஆறுமுகம் செட்டியாருக்கு சொந்தமான நிலம் R.S.No.2859/38, தெற்கில்: 10 அடி x 193 அளவுள்ள பொதுப்பாதை, R.S.No. 2869/1, கிழக்கில்: ராதாகிருஷ்ணனுக்குச் சொந்தமான நிலம், R.S.Nos.2870/22,8, 17& 23, மேற்கில்: ஆண்டாள் அம்மாளுக்குச் சொந்தமான நிலம், R.S.No. 2870/20 மற்றும் 21, (ஆவணத்தின்படி 4 கிரவுண்ட் மற்றும் 1649 சதுர அடி) அளவீடு: கிழக்கிலிருந்து மேற்காக வடக்கு பக்கம்: 55 அடி, கிழக்கிலிருந்து மேற்காக தெற்குப் பக்கம்: 50 அடி, வடக்கிலிருந்து தெற்காக கிழக்குப் பக்கம்: 219 அடி, வடக்கிலிருந்து தெற்காக மேற்குப் பக்கம்: 209 அடி, (ஆவணத்தின்படி 4 கிரவுண்ட் மற்றும் 802 சதுர அடி) அளவீடு: கிழக்கிலிருந்து மேற்காக வடக்குப் பக்கம்: 58 அடி 9 அங்குலம், கிழக்கிலிருந்து மேற்காக தெற்குப் பக்கம்: 44 அடி 7 அங்குலம், வடக்கிலிருந்து தெற்காக கிழக்குப் பக்கம்: 207 அடி, 1 அங்குலம், வடக்கிலிருந்து தெற்காக மேற்குப் பக்கம்: 195 அடி 8 அங்குலம். அத்துடன், பிரிக் க்ளின் சாலையிலிருந்து பின்புறம் செல்லும் 10 அடி X 193 அடி அளவிலான பொதுப் பாதையின் மீதான வழி உரிமையும் இதில் அடங்கும். மேலும், இது புரசைவாக்கம் துணைப் பதிவு மாவட்டத்தின் சென்னை மத்தியப் பதிவு மாவட்டத்திற்குள் அமைந்துள்ளது.

இனம் எண்5: (திரு. அபிலாஷ் முத்தாவுக்குச் சொந்தமான அசையாச் சொத்து): பிளாட் எண்.19, 3 ஆவது தளம், “ஆனந்த் அபார்ட்மெண்ட்ஸ்", 850 சதுர அடி அடித்தளப் பரப்பளவு, பிளாக் ‘A’, கதவு எண்.7 (பிளாட் No. 7/A19), வெங்கடராமன் தெரு, தி.நகர், சென்னை – 600 017, மற்றும் தி.நகர் கிராமத்தின் பிளாக் எண். 113, T.S.No. 8567/2 மற்றும் 8568/2–இல் அடங்கியுள்ள 640 சதுர அடி பரப்பளவுள்ள 4 கிரவுண்டுகளில் உள்ள 291 சதுர அடி பிரிக்கப்படாத பங்கு ஆகியவற்றுடன் கூடிய சொத்து. எல்லைகள்: வடக்கில்: வெங்கடராமன் தெரு, தெற்கில்: திருமதி. உமையாள் ஆச்சியின் வீடு, கிழக்கில்: லோதிகான் தெரு, மேற்கில்: பாப்பிச்செட்டி மற்றும் ராகவன் செட்டியின் வீடு. தி.நகர் துணைப் பதிவு மாவட்டம் மற்றும் சென்னை தெற்குப் பதிவு மாவட்டத்திற்குள் அமைந்துள்ள சொத்து.

இனம் எண்6: (M/s பிரகாஷ் கோல்ட் பேலஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்திற்குச் சொந்தமான அசையாச் சொத்து): கொல்கத்தா மாநகராட்சி வார்டு No. 2, மௌசா சந்தீ, திஹி–பஞ்சநகரம் டிவிஷன் I, துணைப்பிரிவு–15, ஹோல்டிங் எண். 15, வளாக எண்கள். 8A மற்றும் 8B, ராஜா பகான் லேன், கொல்கத்தா– 700 030, காசிப்பூர் டம் டம் துணைப் பதிவு மாவட்டம், 24 பர்கானாஸ் (வடக்கு) பதிவு மாவட்டத்திற்குள் அமைந்துள்ள 11 கொட்டா, 11 சிட்டக், 28 சதுர அடி நிலப்பகுதி மற்றும் அதன் மீது கட்டப்பட்ட சுமார் 9000 சதுர அடி (ஒவ்வொரு தளமும் 3000 சதுர அடி) மொத்தப் பரப்பளவு கொண்ட மூன்று மாடி செங்கல் கட்டிடம். எல்லைகள்: வடக்கு: குஹா சகோதரர்கள் மற்றும் சரளா பாலா தேவியின் நிலங்கள், தெற்கு: ராஜா பகான் லேன், கிழக்கு: 6 அடி அகல பொது வழி, மேற்கு: ஜிதேந்திர நாராயண ராயின் நிலம்.

நாள்: 03-06-2026, இடம்: சென்னை
ஒம்/- அதிகாரப்பூர்வ அதிகாரி, இன்டஸ்இன்ட் பேங்க் லிமிடெட்.